# அர்மகெதோன் யுத்தம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதாகம ஆட்சி முறைக்காலங்களில் இதற்கு முன்பாக, **சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** போன்ற வேத பாடங்களை படித்தோம். இவற்றுக்கு அடுத்தபடியாக வேதாகம சரித்திரத்தில் நடைபெறப்போகும் சம்பவம் **"அர்மகெதோன் யுத்தம்".** இந்த வேதபாடத்தில் இந்த யுத்தத்தைப்பற்றி படிப்போம்.

## அர்மகெதோன் யுத்தத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய வேதாகம பகுதிகள் *வெளி 20:1-10; 14:14-20; 16:16; சக 14:2-9; ஏசாயா 63:1-6; எசே 38-39; யோவேல் 2-3.*

*வெளி 19:11-21*

*11 பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.*

*12 அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.*

*13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.*

*14 பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.*

*15 புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*

*16 ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.*

*17 பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து:*

*18 நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.*

*19 பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும் படிக்குக் கூடிவரக்கண்டேன்.*

*20 அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.*

*21 மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.*

## அர்மகெதோன் யுத்தம் நடக்கும் சமயம்







**(1)** முத்திரைகள், எக்காளங்கள், கலசங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகு ***( வெளி 16:17- 21; 19:1-21 ).***

**(2)** இயேசு கிறிஸ்து தன் இரண்டாம் வருகையில் யூதர்களை அந்திக்கிறிஸ்துவிடம் இருந்து விடுவிக்க வரும்போது ***( வெளி 19:11-21; யோவேல் 3; சக 14:1-5; ஏசா 63:1-7; யூதா 1:14; 2 தெச 1:7 ).***

**(3)** மகா உபத்திரவக்காலம் முடிந்த உடன் ***( வெளி 19:11-21; மத் 24:29-31; 25:31-46 ).***

**(4)** ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு பிறகு ***( வெளி 19:1-21 ).***

**(5)** ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு ***( வெளி 19:19-21; 20:1-10 ).***

**(6)** தானியேலின் 70 வது வாரத்தின் முடிவில் ***( வெளி 11:1-3; 12:6,14; 13:5; தானி 9;27 )***

**(7)** அந்திக்கிறிஸ்து **42** மாதங்கள் ஆளுகை செய்த பிறகு ***( வெளி 13:5; 19:19-21; 2 தெச 2:9 ).***

**(8)** இஸ்ரவேல் வனாந்தரத்தில் **3 ½** வருடங்கள் இருந்த பிறகு ***( வெளி 11:1-3; 12:6,14; 13:5 ).***



***சக 14: 2*** *எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை.*



அந்திக்கிறிஸ்து, ஏற்கனவே தனது ஆளுகையின் கீழ் இருக்கும் 10 நாடுகளின் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கிற ரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகளை கைப்பற்றின பிறகு தன் கீழ் இருக்கும் நாடுகளை திரட்டி எருசலேமுக்கு எதிராக யுத்தம் செய்ய வருவான். ***(வெளி 19:19-21; தானி 11:44; எசே 38:39; சக 14:1-5 ).*** எருசலேம் நகரத்தை அந்திக்கிறிஸ்துவின் படைகளும், அர்மகெதோன் யுத்தத்துக்கு வந்த நாடுகளின் படைகளும் சூழ்ந்து அதனை தாக்கும். பாதி நகரம் பிடிக்கப்படும். வீடுகள் அழிக்கப்படும், பெண்கள் நாசமாக்கப்படுவார்கள். அச்சமயம் திடீர் என இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். அப்பொழுது அர்மகெதோன் யுத்தம் நடைபெறும்.

## அர்மகெதோன் யுத்தம் நடைபெறும் இடம் - அர்மகெதோன். ***வெளி 16:13-16; யோவேல் 3. சக 14:1-15; எசே 38-39.***




இஸ்ரவேல் நாட்டின் கர்மேல் பர்வதத்தின் தென்மேற்கு பகுதியில் இருக்கும் மெகிதோ அல்லது எஸ்ட்ராயெலொன் பள்ளத்தாக்கின் தெற்கு பகுதியில் இருக்கும் **மெகிதோ பர்வதம்** ***( 2 நாளா 35:22; சக 12:11 ).*** யோசுவாவுக்கு கொடுக்கப்பட்ட கானானின் ஒரு பாகத்தின் தலைநகரம் ***( யோசுவா 12:21; 17:11; நியா 1:27 ).*** வரலாற்றில் பல யுத்தங்கள் இந்த இடத்தில் நடைபெற்றிருக்கின்றன.

## அர்மகெதோன் யுத்தத்தில் போரிடுபவர்கள்



**இயேசுவும் அவரது பரலோக ராணுவங்களும், பூமியில் உள்ள இஸ்ரவேலும், பரலோகத்தில் இருந்து இயேசுவோடு வரும் பரிசுத்தவான்களும், தூதர்களும் இயேசுவின் பக்கத்தில் நின்று போரிடுவார்கள்** ***( வெளி 19:11-14; 2 தெச 1:7-10; சக 14:5; 14:14 யூதா 1:14 ).***

***வெளி 19:14*** *பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.*



**அந்திக்கிறிஸ்துவின் தலைமையில், சாத்தானும் அவனது தூதர்களும், பூமியில் உள்ளவர்களும் மறுபக்கம்.** ***( வெளி 12:7-12; 20:1-3; தானி 2:44-45; எசே 38-39; சக 14:1-5; வெளி 16:13-16; 19:19-21 ).***

***வெளி 16: 13*** *அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.*
*14 அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. 16 அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.*

இந்த **மூன்று அசுத்த ஆவிகளும்**, மனிதர்கள் மூலமாக அற்புதங்களை செய்து அவர்களை ஏவி பூமியில் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படாத ராஜாக்களை இணங்க வைத்து, அவர்களை எல்லாம் இயேசுவுக்கு எதிராக யுத்தம் செய்ய கூட்டிச்சேர்க்கும். இந்த ராஜாக்களும் அவர்களது மக்கள், படைவீரர்கள் என்று ஏராளமானோர் இயேசுவுக்கு எதிராக யுத்தம் செய்ய கூடுவார்கள். *2 நாளா 18:18-22* ல் ஆகாப் ராஜா அசுத்த ஆவிகளால் ஏமாற்றப்பட்டு யுத்தத்துக்கு அழைக்கப்பட்டது போல.




## அர்மகெதோன் யுத்தத்தின் நோக்கம்



**சாத்தானின் நோக்கம்:** இயேசு பூமியை மீட்டுக்கொள்வதை தடுத்து அதன் மூலம் தன் அழிவை தடுப்பது *( வெளி 12:12: 19:19-21; 20:1-10; சக 14:1-5 ).*

**தேவனுடைய நோக்கம்:**

(1) இஸ்ரவேலை விடுவித்து ஜாதிகளின் காலங்களை முடிவுக்கு கொண்டு வருவது *( ஏசாயா 63:1-7; சக 14:1-5; லூக்கா 21:24; வெளி 11:1-2 ).*

(2) இஸ்ரவேலை உபத்திரவப்படுத்தியதற்காக ஜாதிகளை தண்டிப்பது *( மத் 25:31-46 ).*

(3) பூமியில் தேவனுடைய அரசாங்கத்தை ஏற்படுத்துவது *( தானி 2:44-45; 7:13-27; சக 14; வெளி 11:15 ).*



(4) வாக்களித்தபடி தாவீதின் அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்துவது *( 2 சாமு 7; ஏசாயா 9:6- 7; லூக்கா 1:32-33; அப் 15:13-18 ).*

(5) பூமியில் எல்லா எதிர்ப்புகளையும் களைவது *( 1 கொரி 15:24-28; வெளி 20:7-10 )*

## அர்மகெதோன் யுத்தம் நடக்கும் கால அளவு

**அர்மகெதோன் யுத்தம் ஒரு நாள் மாத்திரமே நடக்கும்.**

*சக 14:1-7 ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்.*

சாயங்காலத்தில் மீண்டும் *ஏசாயா 30:26* ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மிகுந்த பிரகாசமாக இருக்கும்.



## அர்மகெதோன் யுத்தம் நடக்கும் விதம்

அர்மகெதோன் யுத்தத்தில் கீழ்க்கண்ட விதங்களில் அந்திக்கிறிஸ்துவும் அவனது சேனைகளும் அழிக்கப்படும்.

**இயேசு கிறிஸ்துவின் வருகையின் பிரசன்னத்தினால் நாசம்.**

*2 தெச 2:8 நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.*

இயேசு கிறிஸ்துவின் **பிரசன்னம்** பெரும் நாசத்தை, அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் மத்தியில் உண்டுபண்டும். இப்படிப்பட்ட பெரும் நாசத்தை உண்டுபண்ணுமளவுக்கு இயேசுவின் வருகை மிகுந்த பிரகாசமாய், ஒளிமயமாய், பயங்கரமாக, அக்கினிமயமாக இருக்கும்.



**வல்லமையின் தூதர்களால் அழிக்கப்படுதல்.** *2 தெச 1;7 தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,*

*8 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.*

இயேசுவோடு வரும் மகா வல்லமையுள்ள தூதர்கள் அர்மகெதோன் யுத்தத்தில் பல விதமான பங்காற்றுவார்கள் *( மத் 24:29-31 ).* அவர்களால் அந்திக்கிறிஸ்துவின் சேனை அழிக்கப்படும்.



**பரிசுத்தவான்களால் அழிக்கப்படுதல்**

*யூதா 1: 15 தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.*

ஆயிரமாயிரமான பரிசுத்தவான்கள் என்பது எண்ண முடியாத ஒரு பெரும் இலக்கத்தை குறிக்கிறது. *( தானி 7:10; வெளி 5:11 ).* இயேசுவோடு வரும் எண்ணிலடங்கா பரிசுத்தவான்கள் அர்மகெதோன் யுத்தத்தில் எதிரிப்படைகளுக்கு அழிவை உண்டு பண்ணுவார்கள்.



**கொள்ளைநோய், இரத்தம் சிந்துதல், பெருமழை, பெருங்கல் மழை, அக்கினி, கந்தகம் இவற்றால் அழிவு.**

*எசே 38:22 கொள்ளைநோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் நான் அவனோடே வழக்காடி, அவன்மேலும் அவன் இராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும், பெருங்கல்மழையையும், அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவேன்.*

கொள்ளைநோயையும் இரத்தம் சிந்துதலையும் தேவன் அவர்கள் மேல் அனுப்புவார். பெருமழை, பெருங்கல் மழை, அக்கினி, கந்தகம் போன்றவை வானத்தில் இருந்து அவர்கள் மேல் பொழியும். இதனால் அந்திக்கிறிஸ்துவின் ஜனங்களின் மத்தியில் கடுமையான அழிவு உண்டாகும்.



**வாதையால் அழிவு**

*சக 14:12 எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்து போகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்.*

இவ்வாதையினால் அந்திக்கிறிஸ்துவின் சேனைகளின் **சதைகளும், சரீரத்தின் கண்கள், நாவு போன்ற பாகங்களும் அழுகிப்போகும்.** மனிதர்களும் விலங்குகளும் வெறும் எலும்புக்கூடுகளாக ஆகிப்போகும் அளவுக்கு இந்த வாதை கடுமையாக இருக்கும். இது மனிதர்களுக்கு மாத்திரமல்லாமல் அவர்களது விலங்குகள் அனைத்துக்கும் சம்பவிக்கும்.



**இஸ்ரவேல் யுத்தம் பண்ணுவதால் அழிவு**

*சக 14:14 யூதாவும் எருசலேமிலே யுத்தம்பண்ணும்; அப்பொழுது சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகா திரளாகக் கூட்டப்படும்.*

அர்மகெதோன் யுத்தத்தின்போது, முதலில் அழிவுகளை சந்திக்கும் இஸ்ரவேல் ஜனம் பின் இயேசுவின் பிரசன்னத்தினால் வலுப்பெற்று அந்திக்கிறிஸ்துவின் படைகளுக்கு எதிராக யுத்தம்பண்ணி அவர்களை சங்கரிக்கும். அவர்களின் பொன், வெள்ளி, வஸ்திரங்கள் மகா திரளாக கூட்டப்பட்டு இஸ்ரவேல் ஜனங்களால் பங்கிடப்படும் *( சக 14 ).*



### சுய அழிவு

***சக 14:13*** *அந்நாளிலே கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் உண்டாகும்; அவனவன் தன் தன் அயலானின் கையைப் பிடிப்பான்; அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும்.*

அந்திக்கிறிஸ்துவின் சேனை பலவிதமான மக்களையும், பல நாடுகளில் இருந்து வந்தவர்களையும் கொண்டதாக இருக்கும். அர்மகெதோன் யுத்தத்தின் போது கர்த்தர் அவர்கள் மத்தியில் ஒரு கலக்கத்தை அனுப்புவார். இதனால் அவர்களுக்குள்ளாக வேறுபாடுகளும். சந்தேகங்களும் உண்டாகி ஒருவரையொருவர் அழிப்பார்கள். இதுவரை சேர்ந்து இருந்த ஒவ்வொருவனும் தன் அயலானை தாக்கி அழிப்பான்.



### தேவனுடைய வாயில் இருந்து புறப்படும் பட்டயத்தால் அழிவு

***வெளி 19:15*** *புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*



***ஏசாயா 11:4*** நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். ***( 2 தெச 2:8,9 ).***

கூர்மையான பட்டயம், தேவனுடய வார்த்தையின் ஒரு அடையாளமாக இருக்கிறது ***( வெளி 19:21; எபே 6:17; எபி 4:12; வெளி 1:16 ). 2 தெச 2:8*** ல் **“வாயின் சுவாசம்”** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசுவின் வாயில் இருந்து புறப்படும் **இந்த வார்த்தை என்னும் பட்டயத்தால்** அந்திக்கிறிஸ்துவின் சேனைகளின் பெரும்பான்மையான பகுதி அழிக்கப்படும். **“உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலை”** என்பது அர்மகெதோன் யுத்தத்தின் அழிவைக்குறிப்பிடுகிறது ***( வெளி 14:14-20; ஏசாயா 63:1-6 )***



## யுத்தத்தின் விளைவுகள்

**1. சாத்தானுடைய படைகள் முழுவதும் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டு சாத்தான் கட்டப்படுதல் *( வெளி 19:11-20:3; ஏசாயா 63; எசே 38-39; சக 14; யோவேல் 3 ).***



***வெளி 20:1*** *ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன்கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன்.*

*2 பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.*

**சாத்தானின் படைகள் முழுவதுமாக முறியடிக்கப்படும்.**

**2. பூமியின் படைகளில், ஆறில் ஒரு பகுதி தவிர மற்ற அனைத்தும் அழிக்கப்படுதல்.**



*எசே 39:2 நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழும்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும்பண்ணி,*

இந்த வசனத்தின் ஆங்கில மொழியாக்கத்தை பார்த்தோமானால் அந்திக்கிறிஸ்துவின் படைகளில் எத்தனை பேர் தப்புவார்கள், எத்தனை பேர் அழிக்கப்படுவார்கள் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

*2 And I will turn thee back, and leave but the sixth part of thee, and will cause thee to come up from the north parts, and will bring thee upon the mountains of Israel:*

அந்திக்கிறிஸ்துவின் படைகளில், ஆறில் ஒரு பகுதி தவிர மற்ற படைகள் அனைத்தும் இந்த யுத்தத்தில் அழிக்கப்படும். அதாவது அந்திக்கிறிஸ்துவின் படைகளில் 10000000 பேரை எடுத்துக்கொண்டால் அவர்களில் சுமார் 83,33,334 பேர் அழிக்கப்படுவார்கள் 16,66,666 பேர் தப்புவார்கள்.



**3. படைகளின் பிணங்களை பூமியின் மிருகங்களும் ஆகாயத்து பறவைகளும் 7 மாதங்கள் *தின்னும்***

***( வெளி 19:17-21; எசே 39:4-24; மத் 24:28; லூக்கா 17:34-37; யோபு 39:27 - 30 ).***

*வெளி 19: 17 பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து:*

*18 நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.*



*21 மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.*

*எசே 39:12 இஸ்ரவேல் வம்சத்தார், தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களைப் புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும்.*

யுத்தத்தில் கொல்லப்பட்ட அந்திக்கிறிஸ்துவின் படைகளின் பிணங்கள் ஏராளமானதாக இருக்கும். அவைகளை புதைப்பது என்பது ஒரு பெரிய வேலையாக இருக்கும். அதனால் சுமார் **7 மாதங்களுக்கு மிருகங்களும் பறவைகளும் அப்பிணங்களை தின்னும்.**



**4. சாத்தானும் அவனது தூதர்களும் அசுத்த ஆவிகளும் பாதாளத்தில் 1000 வருடங்களுக்கு கட்டிவைக்கப்படுதல் *( வெளி 20:1-7; ஏசாயா 24:22-23; 25:7 ).***

*வெளி 20:2 பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.*



*ஏசாயா 24:22 அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின்பு விசாரிக்கப்படுவார்கள்.*

சாத்தானும் அவனது தூதர்களும், அவனுக்கு கீழ்ப்பட்டிருக்கும் அசுத்த ஆவிகளும் பரலோகத்தில் இருந்து வருகிற ஒரு தூதனால் சங்கிலியால் கட்டப்பட்டு பாதாளத்தில் 1000 வருடங்களுக்கு அடைத்து வைக்கப்படுவர்.



**5. மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலில் நித்தியமாக *தள்ளப்படுதல்***

***( வெளி 20:10; தானி 7:11; 8:25; 11:45; 2 தெச 2:8-9 ).***

*வெளி 19:20 அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.* அர்மகெதோன் யுத்தத்தின் முடிவில் அந்திக்கிறிஸ்துவும்,

கள்ளத்தீர்க்கதரிசியும் கொல்லப்படுவார்கள். பின் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு உயிர்த்தெழுந்த சரீரங்களுடன் நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள் *( வெளி 20:10; தானி 7:11 ).*



### 6. 184 மைல்கள் நீளத்துக்கு, குதிரையின் கடிவாளங்கள் உயரத்துக்கு இரத்தம் பாய்தல்

*( வெளி 14:14- 20; எசே 39:17-24; ஏசாயா 63:1-7).*

*வெளி 14: 20 நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது.*

அர்மகெதோன் யுத்தத்தில் கொல்லப்பட்ட மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றின் இரத்தம் இவற்றுடன் மழை, கந்தகம், அக்கினி போன்ற யாவும் கலக்கும். இதனால் இரத்தம் சுமார் **184 மைல் தூரத்துக்கு குதிரையின் கடிவாளம் உயரத்துக்கு ( சுமார் 4 அடி உயரத்துக்கு )** பாயும்.



### 7. அந்திக்கிறிஸ்துவின் சேனையில் இறந்தவர்கள் 7 மாதங்களாக புதைக்கப்படுவார்கள்.

*எசே 39:12 இஸ்ரவேல் வம்சத்தார், தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களைப் புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும்.*

*14 தேசத்தைச் சுத்தம்பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்றப் பிரேதங்களைப் புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித்திரிகிறவர்களோடேகூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள்; ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள்.*



சமுத்திரத்தின் கிழக்கே இருக்கும் **“பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கு”** என்ற இடத்தில் அந்திக்கிறிஸ்துவின் சேனையில் இறந்த உடல்களை இஸ்ரவேல் ஜனத்தார் புதைப்பார்கள். பின் அந்த இடம் **அமோன் கோகி பள்ளத்தாக்கு** என்று அழைக்கப்படும். உடல்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவற்றை எல்லாம் புதைக்க சுமார் 7 மாதங்கள் ஆகும். இதற்காக ஏராளமான பேர் வேலையில் அமர்த்தப்படுவார்கள். மனிதர்கள் மூக்கைப்பிடித்துக்கொள்ளும் அளவுக்கு இந்த சடலங்களில் இருந்து புறப்படும் வாடை இருக்கும்.



### 8. அந்திக்கிறிஸ்துவின் சேனைகளின் ஆயுதங்கள் 7 வருடங்களாக எரிக்கப்படுதல்.

*எசே 39:9 இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியே போய், கேடகங்களும், பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும், வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; ஏழுவருஷம் அவைகளை எடுத்து எரிப்பார்கள்.*

*10 அவர்கள் வெளியிலிருந்து விறகு கொண்டுவராமலும் காடுகளில் வெட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள்; அவர்கள் தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களைச் சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.*



அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் செய்யப்படும் யுத்த தளவாடங்கள் பல தீப்பற்றி எரியும் பொருட்களை கொண்டு செய்யப்பட்டதாக இருக்கும். அவகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காத அளவுக்கு இருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் இந்த தளவாடங்களை **சுமார் 7 வருடங்களாக எரிப்பார்கள்.** எங்கெல்லாம் விறகு போன்ற பொருட்கள் எரிக்கபயன்படுத்தப்படுகின்றனவோ, அங்கெல்லாம் விறகுக்கு பதிலாக இந்த தளவாடங்கள் நெருப்பில் எரிக்க பயன்படுத்தப்படும். அந்திக்கிறிஸ்துவின் சேனையின் மற்ற விலையுயர்ந்த பொருட்களையும் இஸ்ரவேலர் எடுத்துக்கொள்வார்கள்



**9. இஸ்ரவேல் விடுவிக்கப்பட்டு தெளிவிக்கப்பட்டு தேவனுடைய நித்திய ஆளுகை நிறுவப்படுதல்** *( வெளி 19:11-20:10; 22:4-5; 11:15; மத் 25:31-46; தானி 2:44-45; 7:13-27; ஏசாயா 9:6-7; லூர்க்கா 1:32-33).*

*லூக்கா 1:32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.* இஸ்ரவேல் நிரந்தரமாக தேவனுடைய எதிரிகளிடம் இருந்து விடுவிக்கப்படும். இஸ்ரவேல் உண்மையான **மேசியா இயேசு கிறிஸ்துதான்** என்று அறிந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்து அவர்களது நித்திய ராஜாவாக அரசாளுவார். மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் தேவனுடைய அநாதிதீர்மானத்தின் கீழ் ஆட்சி செய்யப்படும் தேவனின் நித்திய ஆளுகை நிறுவப்படும்

*சங் 58:10 பழிவாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான்; அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான். 11 அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப்பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.*

**அன்பு சகோதரா! சகோதரி! அநியாயமும், அக்கிரமமும், பாவமும், அநீதியும் எங்கும் தாண்டவமாடும்போது …….. " நீதியாய் வாழுகிற நீதிமானுக்கு பலன் உண்டோ " என்ற கேள்வி இப்போது எங்கும் மனிதனால் கேட்கப்படலாம். சோர்ந்து போகாதீர்கள். நிச்சயமாய் நீதிமானுக்கு பலன் உண்டு.**

**7 மாதங்கள் புதைக்கப்படும் அளவுக்கு அக்கிரமக்காரர்களின் சடலங்களை பார்க்கும்போது,**
**பூமியின் பறவைகள் எல்லாம் அவர்களது சடலங்களை தின்னுவதை பார்க்கும்போது…..**
**7 வருடங்கள் எரிக்கப்படும் அளவுக்கு அவர்களின் யுத்த தளவாடங்களை பார்க்கும்போது …….**
**184 மைல் தூரத்துக்கு அக்கிரமக்காரர்களின் சரீரங்களில் இருந்து புறப்படும் இரத்தம் ஓடுவதை பார்க்கும்போது ……..**
**அந்த இரத்தத்தில் நீதிமான் தன் பாதங்களை கழுவுவதை பார்க்கும் போது …….**

**மனிதன் சொல்லுவான் " மெய்யாய் நீதிமானுக்கு பலன் உண்டு……**
**மெய்யாய் பூமியிலே நியாயம் செய்கிற தேவன் உண்டு " ……**

**இந்த அர்மகெதோன் யுத்தத்தில் தேவனுடைய சேனையில் அணிவகுத்து வர**
**ஆயத்தமாயிருப்போம்,**
**மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.**

**ஆமென்.**

*குறிப்பு:* இதன் தொடர்ச்சியாக - இஸ்ரவேல் அல்லாத புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு, ஆயிர வருட அரசாட்சி, கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.
இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப் படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகைப்பற்றியதான வீடியோவை - (Power point slide show with narration and Bible references in Tamil) நம்முடைய இணையதளத்தின் "**வீடியோ**" பகுதியிலேயோ அல்லது http://youtu.be/kxg3QM_MnwM என்ற இணைப்பிலோ பார்வையிடும்படி உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.
**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**
**Design, editing and special effects; Bro. Donald.**
If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com
Ph: 968 25572195, 99663557.

**Resources;** International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament) etc. All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

------------------------------